16th March 1966]

* 303 கேள்வி—திரு. சீ. சிவசுப்ரமணியன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரத்திற்கும், கடலூருக்கும் நடுவிலுள்ள வெள்ளாற்றில் B. முட்லூர் என்ற இடத்தில் அதிக தூரத்தைத் தடுக்கும்பொருட்டு ஒரு மதகு கட்டும் வேலையை (பாலம்) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The work has not been included in the Fourth Five-Year Plan.

(b) Does not arise.

* 304 கேள்வி—திரு. சீ. சிவசுப்ரமணியன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லா, பரங்கிப்பேட்டை ஓரம் வெள்ளாற்றில் போக்குவரத்துக்காக ஒரு மிதக்கும் பாலம் போட அரசாங்கத்தில் ஏதேனும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில் அது எப்பொழுது தொடங்கும் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) There is no such proposal under consideration of the Government.

(b) Does not arise.

* 305 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for food be pleased to state—

(a) whether the Government are aware of the traffic jam caused on the Bhavani–Komarapalayam Highway due to the norrow width of the Bhavani-Komarapalayam bridge, and

(b) whether there is any proposal to widen the sand bridge?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes Sir.

(b) A scheme for reconstructing the bridge, has been proposed for inclusion in the draft Fourth Five-Year Plan for National Highways.

திரு. வை. சங்கரன் : இது எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கலாம் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான்காவது ப்ளானில் சேர்க்கப் பட்டிருக்கிறது. நிதி வசதிக்குத் தகுந்தாற்போல் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. பொன்னுசாமி : திருநெல்லியில் தாம்பரபரணியைக் கடக்கும் பாலத்தில் அதை விரிவுபடுத்தும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். கிராஸிங்

[16th March 1966

இருப்பதால் டவுனுக்குப் போகக் கஷ்டமாக இருப்பதினால் ஒரு பை பாஸ் ரோடும் சாத்தூரில் இருப்பது போன்று ஒரு பாலமும் போடுவதற்கு உத்தேசமுண்டா?

(பதில் இல்லை)

திரு. ஜே. மாதா கவுடர்: பவானி—கொமாரபாளையம் பாலத்தை அகலப்படுத்துவது பற்றி சொன்னார்கள். பவானிக்கும் கோவைக்கும் போகக் கூடிய ரோட்டிலே, அந்த நாஷனல் ஹைவேஸ் ரோட்டில் அந்தப் பாலம் இருக்கிறது. பக்கத்திற்குப் பக்கத்தில் இருப்பதால் இரண்டு பாலங்களும் ஒட்டு மொத்தமாக எடுக்கப்படுகின்றனவா அல்லது தனித்தனியாக எடுக்கப்படுகிறதா?

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தப் பாலத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. வை. சங்கரன்: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலா, இரண்டாவது ஆண்டிலா, மூன்றாவது ஆண்டிலா, நான்காவது ஆண்டிலா, அல்லது ஐந்தாவது ஆண்டிலா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: The approval of the Government of India for the draft Fourth Five-Year Plan for National Highways is still awaited.

MR. SPEAKER: I shall take up the questions relating to Public Health after the Hon. Minister for Health arrives.

பஞ்சாயத்து தலைவர்கள்

*309 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் சமீபத்தில் நடந்த பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்களின்போது, சிறையில் இருந்தபடி தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) மேற்படி பஞ்சாயத்துக்கள் எவ்வாறு செயலாற்றுகின்றன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) இருவர்.

(இ) ஒரு பஞ்சாயத்தின் நிர்வாகம் அதன் துணைத் தலைவராலும், மற்றொன்றின் நிர்வாகம் தலைவரின் பிரதிநிதியாலும் நடத்தப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக பள்ளிக்கூட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அந்த மாதிரி தகவல் இல்லை.